## தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (13.07.2016 முதல் 17.07.2016 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


==========================================================================

**தேதி:12.07.16**

**கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (08.07.2016– 11.07.2016)**

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.2 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 36 – 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 30 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 – 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 57 – 65 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 7 |

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 13.07.2016 | நாள் 2 14.07.2016 | நாள் 3 15.07.2016 | நாள் 4 16.07.2016 | நாள் 5 17.07.2016 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0.5 | 1 | 5 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 37 | 37 | 36 | 36 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 30 | 30 | 28 | 28 | 26 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 6 | 7 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 57 – 64 | 57 – 64 | 63 – 70 | 63 – 70 | 73 – 83 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 7 | 7 | 7 | 7 | 7 |
| காற்றின் திசை | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு |

13.07.2016 முதல் 17.07.2016 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 0.5 – 5 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி**

**நெல் தரிசு பருத்தி: முதிர்ச்சி பருவம். நெல் : நடவு பருவம்**

- நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 200 கிலோ ஜிப்சம் இடவேண்டும். மேலும், மணிச்சத்திற்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்து மிகவும் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு 35 கிலோ யூரியா இடவேண்டும்.
- பயிர் நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் களை முளைப்பதற்கு முன் களைக்கொல்லிகளான பூட்டாகுளோர் 50 இ.சி 1.0 லிட்டர் (அ) பென்சல்பூரான் மீதைல் + பிரிட்டிலாகுளோர் 4 கிலோ / ஏக்கர் இவைகளில் ஏதாவது ஒன்றை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். களைக்கொல்லி இடும் போது வயலில் 2 செ.மீ அளவிற்கு நீர் இருக்கவேண்டும். களைக்கொல்லி இட்டபின் 2 நாட்களுக்கு வயலுக்கு நீர் பாய்ச்சவோ வடிக்கவோ கூடாது.
- நடவு செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் 50 இ.சி. 400 மி.லி./ஏக்கர் அல்லது 50 சதம் நனையும் கந்தகதூள் 400 கிராம்/ஏக்கர் அல்லது டைக்கோபால் 600 மி.லி./ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**இயக்குநர்**